அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:11 /2017
தேதி: 23.1.2017

## தமிழகத்திற்கு உடனடியாக முழுநேர ஆளுநர் நியமிக்கப்படவேண்டும்.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் கோரிக்கை.

இந்தியாவின் பெரிய மாநிலங்களில் ஒன்றான தமிழகத்திற்கு கடந்த 2016 ஆகஸ்ட் மாதத்திலிருந்து மகாராஷ்டிரா மாநிலத்தின் ஆளுநர் மாண்புமிகு வித்யாசாகர் ராவ் அவர்கள் கூடுதல் பொறுப்பு ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழகம் காவிரி பிரச்சனை, விவசாயிகள் பிரச்சனை, ஜல்லிக்கட்டு பிரச்சனை போன்ற பல முக்கிய பிரச்சனைகளை சந்தித்துக்கொண்டிருக்கும் இந்த வேளையில், அவசியம் ஏற்படும் காலகட்டத்தில் மட்டும் தமிழகத்திற்கு வருகை தர வேண்டிய சூழல் நிலவுகிறது. ஆளுநர் அவர்களுக்கும் அவரது கட்டுப்பாட்டில் உள்ள மாநிலத்தையும் கவனிக்க வேண்டிய பொறுப்பும் உள்ளது.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டாவது மாநிலமாக திகழும் தமிழகத்திற்கு இதுவரை ஏற்படாத வறட்சி நிலவும்பட்சத்தில், இந்திய மாநிலமான தமிழக மாநிலத்திற்கு உடனடியாக முழுநேர ஆளுநரை நியமிக்க வேண்டும் என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக மத்திய அரசுக்கு கோரிக்கை வைக்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்